REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 30உ வியாழன் (15—9—55) ★ ★ வெளியூர்: ஆவணி 31உ வெள்ளி (16—9—55) [இதழ் 80

உதவிக் கூட்டுறவு அதிகாரி வேலை

70 இடங்களுக்கு 11,000 பேர் போட்டி!

அகமதாபாத், செப் 14—

மாகில அரசாங்கம், அண்மையில், '70 உதவி மாவட்டக் கூட்டுறவு அதிகாரிகள் தேவை' என்று வெளியிட்டிருந்த விளம்பரத்தைக் கண்டு அந்த 70 இடங்களுக்குச் சுமார் 11,000 பேர்கள் விண்ணப்பம் செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

அந்த வேலைக்குக் குறைந்தபட்சக் கல்வி யோக்யதாம்சமாக 'உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்புத் தேறியிருக்க வேண்டும்' என்று கோரப்பட்டிருக்கிறது.

'கொள்கைக் குழப்பத்தில் சிக்காத கட்சி'

'முதன்மந்திரிகள் செயல் தவறானது'

காங்கிரஸ் மேலிடம் கண்டனம்

மாநிலபுனரமைப்புக்குழு சிபாரிசுகள்குறித்து பரபரப்பு

புதுடில்லி, செப். 14—

ஆந்திர, திரு-கொச்சி முதன் மந்திரிகள், மாநில புனரமைப்புக் குழுவினர் தங்கள் அறிக்கையை இன்னும் தயாரித்து முடிக்காமலிருக்கும்போதே, 'குழுவினரது சிபாரிசுகள்' என்று சிலவற்றை முன்கூட்டியே வெளியிட்ட செயலை காங்கிரஸ் மேலிடம் கண்டித்திருப்பதாகத் தெரிகிறது.

இது பற்றி, அந்த முதன் மந்திரிகள் இருவருக்கும், காங்கிரஸ் பொதுச்செயலாளர்களில் ஒருவர் கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் பற்றி சர்க்காரின் கொள்கையிலும் மாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மாநில புனரமைப்புக்குழுவின் முடிவுகளை ஒருமனதானவை எனக் கருதி, சர்க்காரும், நாட்டு மக்களும் எவ்வித தடையும் சொல்லாமல் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று முன்பு சர்க்கார் சார்பில் கூறப்பட்டு வந்தது.

ஆனால், அண்மையில் ரீவா நகரில் பேசிய பண்டித நேரு, 'மாநில புனரமைப்புக் குழுவின் முடிவுகள் இறுதியானவையல்ல' என்று தெரிவித்திருக்கிறார்.

ஆந்திர முதன் மந்திரி பி. கோபால ரெட்டி சமீபத்தில், ஐதராபாத் மாநிலம் துண்டாடப்பட்டு, ஐக்கிய கர்நாடக மாநிலம், தெலிங்கானா மாநிலம் அமையும் என்றும், மராட்டிய மாவட்டம் பம்பாயுடன் இணையப் பெறும் என்றும் தெரிவித்திருந்தார்.

திரு-கொச்சி முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன், திரு-கொச்சி, சென்னையில் உள்ள மலபார் மாவட்டம், தென்கன்னட மாவட்டத்தில் உள்ள காசர் கோடு வட்டம் ஆகியவை இணைந்த ஒரு கேரள மாநிலம் அமையும் என்றும், தென் திருவாங்கூரில் உள்ள தமிழ் வட்டங்களில் ஐந்து தமிழகத்துடன் சேர்ந்துவிடும் என்றும் அறிவித்திருந்தார்.

இந்த முதன் மந்திரிகள் இருவரும், டெல்லியிலிருந்து திரும்பிய பின்னர் இந்த அறிவிப்புக்களை விடுத்திருந்தனர்.

இவர்கள் இருவரும், மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் பற்றிக்கருத்துத் தெரிவித்தது, பரவலாகக் குழப்ப நிலையை உருவாக்கியிருப்பதாகத் தெரிகிறது.

கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர் ஒருவர், தெலிங்கானா மாநிலத்தை ஆந்திராவுடன் இணைத்து, 'விசால ஆந்திர மாநிலம்' அமைக்க வேண்டுமென்பதற்காக ஒருகையெழுத்து இயக்கம் துவக்கியிருக்கிறார் என்று தெரிகிறது; குழுவினரிடம், கம்யூனிஸ்டுகள் தந்த அறிக்கையில் இதனையும் ஒரு கோரிக்கையாகக் குறிப்பிட்டிருந்தனர்.

சில காங்கிரஸ் மக்கள் சபை உறுப்பினர்கள், 'கேரள மாநிலத்தைத் தமிழகத்துடன் இணைக்க வேண்டும்' என்று கோரி, அதற்காகக் 'கையெழுத்தவேட்டை'யை மேற்கொண்டிருக்கின்றனர் என்றும் தெரிகிறது.

மேலும், மைசூர் காங்கிரஸ் எம். எல். ஏ.-க்கள் சிலர், 'உத்தேசிக்கப்பட்டுள்ள ஐக்கிய கர்நாடக மாநிலத்தில் மைசூரைச் சேர்க்கக்கூடாது,' என்று, முதன்மந்திரியிடம் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றனராம்.

பஞ்சாபில் உள்ள அகாலிகள், 'பஞ்சாப் மொழி வழி மாநிலம் அமைக்கப்பட்டாலன்றி தாங்கள் மாநில புனரமைப்புக் குழுவின் எந்தச் சிபாரிசையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை,' என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றனர்.

தீவிரமாக பரிசீலனை செய்கின்றனராம்!

பாடப் புத்தகங்களை சர்க்காரே பிரசுரிக்கும்?

சென்னை, செப் 14—

"ஏழை மாணவர்கள் சம்பளமின்றி வாசிப்பதற்கு ஏற்பாடு செய்வதும், எழுதும்பலகைகள், புத்தகங்கள் ஆகியவை இலவசமாக அளிக்கப்பட வேண்டியதும் அவசியமாகிறது; இதற்காக, ஆரம்பப்பள்ளிக்கூடப் புத்தகங்களை சர்க்காரே பிரசுரிக்கலாமாவென்பது பற்றி தீவிரமான பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது,"

என்று, அமைச்சர் பக்தவத்சலம், ஒரு ஆரம்பப்பள்ளியில் மேற்கொண்டு ஒரு பகுதியைத் திறந்து வைத்துப் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

அகதிகள் பாகிஸ்தானில் விட்டுவந்த சொத்துக்கள்

ரூ. 500 கோடி மதிப்புடையனவாம்

தொகையைத் திரும்பத் தரக் கோரப்படுமாம்!

புதுடில்லி, செப். 13—

மேற்குப் பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்த அகதிகள், அங்கு சுமார் ரூ. 500 கோடி பெறுமான சொத்துக்களை விட்டுவந்திருப்பதாயும், அந்தத் தொகையைப் பாகிஸ்தானிடமிருந்து பெறுவதற்கான முயற்சிகளில் சீக்கிரமே தான் ஈடுபடப் போவதாகவும், அகதி புனரமைப்பு இலாகா மந்திரி மேகர்சந்த் கன்னா மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவிலிருந்து முஸ்லிம்கள் அகதிகளாகப் பாகிஸ்தான் சென்றபோது விட்டுச்சென்ற சொத்துக்களின் மதிப்பு ரூ. 100 கோடிதான் என்றும், எனவே, பாகிஸ்தான் நமக்கு ரூ. 400 கோடி தரவேண்டியிருக்கிறது என்றும், எனவே, அந்தத் தொகையை பாகிஸ்தான் நமக்குத் தருமாறு ஏன் நாம் வற்புறுத்தக்கூடாது என்றும் அந்த மந்திரி மக்கள் சபையில் பேசியிருக்கிறார்.

'அகில இந்தியாவிலும் தி. மு. கழகம் ஒன்றே'

'இராசேந்திரரின் தென்னாட்டு நிலையம் திப்பு சுல்தானின் பாடி விடுகள் போன்றதே'

சென்னைக் கூட்டத்தில் சம்பத் இலட்சிய பரணி

"திப்புசுல்தான், மைசூரில் துவங்கி, சங்ககிரி, சத்தியமங்கலம், ஈரோடு, திண்டுக்கல் வரையில் கோட்டைகளும், பாடி விடுகளும் அமைத்திருந்தான்—என்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன;

"திப்புசுல்தான், பாடிவிடுகளை ஏன் அங்கெல்லாம் அமைத்தான்? அங்குள்ள மக்களுடன் உறவாடவா? சொந்தம் கொண்டாடவா? அல்லவே! அவர்களை ஆதிக்கம்புரியத்தானே பாடி விடுகளை அமைத்தான்?

"அதுபோலத்தான், குடியரசுத் தலைவர் இராசேந்திரர் ஐதராபாத்தில் நிலையம் அமைப்பது, நம்முடன் சொந்தம் கொண்டாட அல்ல; இந்த நாட்டில் தங்களுக்கிருக்கும் ஆதிபத்திய உரிமையை எடுத்துக்காட்டுவதற்காகத்தானே தவிர, வேறு எதற்காக?

"ஐதராபாத்தில் அமையும், 'ராஷ்டிரபதி நிலைய'ங்கள், 'நமது அணிவகுப்பை—விடுதலைப் படையை நாம் பலப்படுத்திக் கொள்ளவேண்டும்' என்பதைத்தான் நமக்குச் சொல்கின்றன.

"இந்தியப் பேரரசு, திப்பு சுல்தான் அமைத்தது போன்ற பாடி விடுகள் அமைக்கும் பத்தாம் பசலி ஏகாதிபத்தியப் போக்கினை மேற்கொண்டிருக்கிறது — என்பதைத்தான் நமக்கு ஐதராபாத் நிலையம் நினைவூட்டுகிறது.

"நாம், 'இந்த நாட்டில் இந்தியை மக்கள் ஏன், எதற்காகக் கற்றுக்கொள்ள வேண்டும்? என்ன அவசியத்திற்காகக் கற்றுக்கொள்ள வேண்டும்?'—என்று கேட்டு வருகிறோம்; இந்திய சர்க்கார் மந்திரி கேஸ்கர் கூறியிருக்கிறார்—'தமிழர்கள் தாங்களாகவே இந்தியைக் கற்றுக்கொள்ளும் வரையில் நாங்கள் காத்துக் கொண்டிருப்போம்' என்று!

"நாம், 'இந்தியையே ஏற்றுக்கொள்ள மாட்டோம்'—என்று, அதற்கான காரண விளக்கத்துடன் கூறி வருகிறோம்; கேஸ்கர், நாம் கூறுவதற்குப் பதில் தருவதை விடுத்து 'நாம் கற்றுக்கொள்ளும் வரை காத்துக் கொண்டிருப்போம்' என்று கூறுகிறார்; என்ன முரட்டுத்தனமான பேச்சு?

"காங்கிரஸ் நண்பர்கள், நாட்டில் நிலவும் நிலைகளின் தாத்பரியங்களைப் புரிந்து கொள்ளாதவர்களாகவே இருக்கின்றனர்; நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம், அவர்கள் காங்கிரஸ் மீது மக்கள் கொண்டிருக்கிற வெறுப்பு, அந்தக் காங்கிரசில் உள்ள சில மனிதர்களின் மீதுள்ள வெறுப்பு என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர்; மனிதர்களை மாற்றி மாற்றி, புதுப்புது மனிதர்களைக் காங்கிரசில் சேர்த்துப் பார்க்கின்றனர்; அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்—மக்கள், காங்கிரஸ் ஸ்தாபனத்தின் மீது, அதன் நடைமுறைக் கொள்கைகள் மீது வெறுப்புக் கொண்டிருக்கிறார்களே தவிர, அதில் உள்ள சில மனிதர்கள் மீதல்ல;

"சில ஆண்டுகளுக்கு முன்புவரை, 'காங்கிரஸ், மக்களுக்கு நன்மை செய்ய முடியுமா?'—என்று கேட்கப்பட்டது போய், 'இந்தி மொழி புகுத்துதல் போன்ற சிக்கல்களின் விளைவாகக் காங்கிரஸ்—தென்னாட்டுக் காங்கிரஸ், திராவிடர்களின் அடிமைத்தனம் நீடிப்பதற்கான ஒரு ஸ்தாபனம்—அதில் உள்ளவர்கள் வடநாட்டவரின் ஏஜெண்டுகள்—வடநாட்டவருக்கு இந்த நாட்டில் வேவு பார்த்து செய்தி அனுப்பும் தூதுவர்கள்,' என்று, மக்கள் முடிவு செய்திருக்கின்றனர்;

"புதுப்புது ஏஜெண்டுகளை இந்த நாட்டிற்கு வடநாட்டவர் அனுப்பிப் பார்க்கின்றனர்;

"ஒரு நோயாளியைக் காப்பாற்ற ஒருவர்பின் ஒருவராக டாக்டர்கள் வந்து போவதைப்போல, வடவரின் ஆதிக்க ஆயுளை நீடிக்க பலப்பல ஏஜெண்டுகள் வந்து போய்க்கொண்டிருக்கின்றனர்;

"நோயாளி வீட்டிற்கு வரும் டாக்டர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போவது, 'நோயாளி, பிழைப்பதற்குரிய வாய்ப்பை இழந்துவிட்டார்' என்றுதான் பொருள்படும்; ஒவ்வொரு டாக்டராக வந்து போயும் நோயாளியைக் காப்பாற்ற முடியாது போனால்தான், பெரிய பெரிய டாக்டர்களை எல்லாம் அழைத்துப் பார்க்கும் கையறு நிலை ஏற்படும்; அதுபோல, இந்த நாட்டிற்கு வடவரின் ஆதிக்கத்தை எப்படியாவது இங்கு நிலைக்கச் செய்யவேண்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

சென்னை துறைமுகத்தில் பணியாற்றும் தனிப்பட்ட தொழிலாளர் நிலை உயர்த்தப்படும்

நியாயமான ஊதியமும் கிடைக்குமாம்

சென்னை, செப். 14—

தனிப்பட்ட முறையில் சென்னை துறைமுகத்தில் பணியாற்றும் தொழிலாளர் நிலையை உயர்த்துவதற்கு வழிகோலப்பட்டுள்ளது.

அவர்களை வேலைக்கு நியமித்துக் கொள்ளும் முதலாளிகள் சில வகையினருக்கு 'லைசென்ஸ்' வழங்கும் முறை அக். 1-ந் தேதியிலிருந்து கொண்டு வரப்படக் கூடும்.

துறைமுக போர்டு மேற்கொள்ளும் இந்த நடவடிக்கையால், 1,500-லிருந்து 2,000 தொழிலாளர்கள் பலனடைவர் என்றும், போர்டின் புதிய விதி முறைகளின் படி தொழிலாளருக்கு நியாயமான ஊதியம் கிடைக்குமென்றும் கூறப்பட்டுள்ளது

இனிமேல், இரசாயன உரங்கள், கனிப் பொருள்கள், நிலக்கரி, இரும்பு, கந்தகம் போன்ற பொருள்களைச் சுமப்பதற்குப் பெண் தொழிலாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்களாம்,

23 வயதுக்குள் துணை தேடாதே!

பாட்னா, செப். 14—

பிகார் மின்சார எஞ்சினியரிங் இலாகாவில் பணிபுரியும் எஞ்சினியர்கள், 23 வயதுக்கு முன் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று, தடை விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மேலும், 23 வயதுக்குள் திருமணம் செய்துகொண்டவர்கள் வேலைக்கு மனுச் செய்து கொண்டால், அவர்களது மனுக்களை நிராகரிக்கவும் புதிய சட்டங்கள் இயற்றப் படுவதாகத் தெரிகிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 15—9—'55 வியாழன்

என்ன பெயர்?

"பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு ஓடிப்போனால், 'அகதி' என்ற பெயர் கிடைக்கும்; அந்தப் பெயர் கிடைத்தால், 'சொர்க்க வாழ்க்கை' பூலோகத்தில் கிடைக்கும்" என்று, பாகிஸ்தானில் உள்ள வட நாட்டு இந்துக்கள், இந்திய எல்லைக்கு ஓடிவருகின்றனர் இலட்சக்கணக்கில் என்று கூறப்படுகிற அளவு, அகதிகளுக்கு இந்திய சர்க்கார் சலுகைகள் தந்து வருகின்றனர் என்பதை நாடறியும்.

அகதிகளுக்கு மறு வாழ்வு தருவது என்ற பெயரால் 1954-ம் ஆண்டு வரையில் உள்ள ஏழாண்டு காலத்தில் இந்திய சர்க்கார் இருநூற்றைம்பது கோடி ரூபாய்க்கும் அதிகமாகச் செலவிட்டிருக்கின்றனர்.

இந்தியாவில் அகதிகளுக்குக் கிடைக்கும் கோலாகல வாழ்க்கையைக் கண்ணுறும்போது, பாகிஸ்தானில் பாதுகாப்புடன் கூடிய நல்வாழ்க்கை பெற்றிருப்பவர்கள்கூட இந்தியாவிற்கு ஓடிவந்துவிட எண்ணுகின்றனர்.

'பாகிஸ்தான் முஸ்லிம்களில் சிலருக்கு அந்தச் 'சபலம்' ஏற்படுகிறது' என்றுகூட சில திங்களுக்குமுன் கூறப்பட்டது.

இப்படி, அகதிகளுக்குச் சலுகை தருவதில் இந்திய சர்க்கார் ஒரு நியாய அளவையும் கூட மீறி, தங்களின் சக்திக்கு மிக அதிகமாகவே செலவிட்டு மறுவாழ்வு தரும் வேலையில் ஈடுபட்டிருப்பது குறித்து நாம் அவ்வப்போது இங்கு எழுதி வந்திருக்கிறோம்.

இப்போது இந்தியப் பேரரசு, மேற்குப் பாகிஸ்தானில் எந்தவித உடைமைகளும் பெறாமலிருந்து, இந்தியாவிற்கு வந்தவர்களுக்குக்கூட இங்கு சொத்துக்கள், உடைமைகள் தேடித் தருவது என்று முடிவு செய்து, காரியமாற்றுவதாகத் தெரியவருகிறது.

நியாயமான காரணங்களுக்காகவோ, நெருக்கடிகளுக்கு அஞ்சியோ, அல்லது பேராசை கொண்டோ—எந்தக் காரணத்தினாலோ—இந்தியாவிற்கு அகதிகள் என்ற பெயரில் ஓடி வருபவர்களை, அன்புடன் வரவேற்று, வாழ்வு தந்து ஆதரிப்பதை நாம், 'தேவையே இல்லாத காரியம்' என்று கூறுவதாக யாரும் எண்ணிவிட முடியாது. உண்மையான அகதிகளுக்கு வாழ்வு தருவதில் இந்திய சர்க்கார் அக்கரை காட்டுவது அவசியமானதே என்று தான் நியாய உள்ளங்கொண்ட எவரும் கருதுவர்.

'இந்தியப் பேரரசு அளவுக்கு மீறிய சலுகைகள் காட்டுவதால்தான் மே. பாகிஸ்தானிலிருந்து ஓடிவரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது,' என்று ஏற்கனவே வடநாட்டு அரசியல் வட்டாரங்கள்தான் கருத்தறிவித்தன; அப்படி ஒரு நிலை இருக்கும்போது, மேலும் மேலும் சலுகைகள் என்ற பெயரில், மக்களின் வரிப் பணத்தை வாரி இறைப்பதை, 'நியாயம்' என்று எல்லோரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்; ஏனெனில் உண்மையிலேயே, ஆதரவு காட்டப்பட வேண்டியவர்களுடன், பேராசைக்காரர்கள் பலருக்கும், பொதுமக்களின் வரிப் பணம் 'சலுகை'களாக மாற்றித் தரப்படுவதை, 'நியாயம்' என்று கூறமுடியாது.

நிலை இவ்வாறிருக்கையில், 'மேலும் சலுகைகள் தர வேண்டும்; அகதிகள் மறு வாழ்வு பெறும் விஷயத்தில் இந்திய சர்க்கார் போதுமான அக்கரை காட்டவில்லை,' என்று குறைப்பட்டுக் கொள்ளுபவர்களும் இருக்கிறார்கள்.

இவை எல்லாவற்றையும் நாம் திரும்பத் திரும்ப எடுத்தெழுதுவதின் நோக்கம், இந்தியப் பேரரசு, தனது இனமக்கள் — வடநாட்டவர் சிறிது அலைக்கழிக்கப்பட்டாலும், அல்லல் பட்டாலும அந்த அல்லலைப் போக்குவதற்கு ஓடோடிச் செல்லுகிறது; அவர்களது வாழ்க்கை நலன்களுக்குப் பாதுகாப்புத் தரப் பாடுபடுகிறது; அளவுக்கு மீறி அக்கரை காட்டுகிறது; ஆனால், தென்னாட்டவர் —திராவிடர், வேதனைத் தீயில் வெந்து சாம்பலானாலும் கவலை கொள்வதில்லை—கண்ணீர் விடுவதில்லை என்பதை, எடுத்துக் காட்டத்தான்!

திராவிடர்கள், தங்கள் உற்றாரையும், உறவினரையும் இங்கு வாழவைக்க முடியாமையினால் நாட்டை விட்டே வெளிநாடுகளுக்கு ஓடி வாழ்வு தேடி வதங்குகின்றனர்.

அவர்களில் எட்டு இலட்சம் பேர், இலங்கைத் தீவில் இன்னல் பலவற்றிற்கு இலக்காகித் தவிக்கின்றனர்; 'அவர்களது வாழ்க்கைச் சிக்கல்களுக்கு முடிவுகாண தன்னால் இயலவில்லை' என்று, இந்தியப் பிரதமர் அண்மையில்தான் அறிவித்தார்.

'இலங்கையிலிருந்து துரத்தப்பட்டு இங்கு ஓடி வருவோர், தாங்களாகவே வாழ்வு தேடிக்கொள்ள வேண்டும்,' என்று, சென்ற ஆண்டில் இந்திய நிதி மந்திரி தேஷ்முக் தெரிவித்தார்.

பர்மாவில் வாழும் தமிழர்கள்—திராவிடர்கள் தாயகம் திரும்பும்போது, அவர்கள் அங்கு விட்டுவரும் சொத்துக்களுக்கு பர்மா சர்க்கார் நியாயமான நஷ்ட ஈடு தரவில்லை என்று குறைபட்டுக்கொண்டனர். அந்தக் குறையைப் போக்க இந்தியப் பேரரசு துரும்பும் தூக்கிப்போடவில்லை. இப்படி, தென்னாட்டவர் அவதிப்பட்டால், அவர்களது அவதியைப் போக்க அக்கரை காட்டுவதில்லை.

ஆனால், வடவர்கள் அவதிக்கு ஆளாக நேரிட்டால், அளவுக்கு மீறிய அக்கரையுடன், அவதி துடைக்கப் பாடுபடுகிறது, இந்தியப் பேரரசு!

அதன் இந்தப் போக்கை, 'நரவஞ்சனை—ஏகாதிபத்தியப் போக்கு' என்று நாம் கூறுகிறோம்; 'இல்லை' என்று மறுப்போர், இந்தப் போக்கிற்கு வேறு என்ன பெயர் தருகிறார்களோ?

நேபாளத்தில் அரசியல் குழப்பம்?

டாக்டர் சிங் வருகையின் எதிரொலி!

காட்மண்டு, செப். 12—

ராணா மன்னர் பரம்பரையினர் நேபாளத்தை ஆள்வதை எதிர்த்து கடந்த 1950—51-ம் ஆண்டு பெரும் புரட்சியிலீடுபட்ட 52 வயது நிரம்பிய டாக்டர் கே. ஐ. சிங், திபேத்திலும், செஞ்சீனாவிலும் மூன்றரை ஆண்டுக்காலம் தங்கிவிட்டு, இப்போது நேபாளம் திரும்பி, மன்னரின் மன்னிப்பைப் பெற்று சுதந்திரக் குடிமகனாக விளங்குகிறார்.

"நேபாளத்தை 'விடுவிப்பதற்கான திட்டத்துடன்' ஒரு கம்யூனிஸ்டாக அவர் சீனாவிலிருந்து திரும்பியிருக்கிறாரா, அல்லது கடமையாற்றுவதற்காக வருந்தி திருந்திய மனிதராக வந்திருக்கிறாரா?" —என்ற இந்தக் கேள்வியைத் தான், இன்று நேபாளத்தில் ஒவ்வொருவரும் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இரண்டு முறை சிறையினின்றும் தப்பியவரும், மூன்று முறை இராணுவத்தினரிடமிருந்து தனது ஆயுத பலத்தால் தன்னைப் பாதுகாத்துக்கொண்டு, பிடிபடாது தப்பியவருமான டாக்டர் சிங் நாடு திரும்பியுள்ளதை ஒட்டி நாட்டில் பெரியதொரு அரசியல் குழப்பம் உருவாகக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

★

முடியாட்சி தேவையாம்!

காட்மண்டு, செப். 11—

இங்கு வந்தடைந்துள்ள புரட்சித் தலைவர் சிங், தான் நேபாளத்தில் இன்னும் முடியாட்சி தேவை என்று எண்ணுவதாகவும், தான் கம்யூனிசத்தைப் பரப்புவதற்காக நேபாளம் திரும்பவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

தான் சீனாவில் ஒரு அரசியல் அகதியாகவே இருந்ததாகவும், தனக்கு அங்கே திட்டமிடப்பட்ட வாழ்க்கைதான் கிடைத்திருந்தது என்றும், அங்கு தங்கியிருந்த நாட்களில் சீனாவின் 'ஜனநாயகம்' பற்றி ஆராய்ந்தறிவதற்கு, நேரம் இருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சீனாவிலும், திபேத்திலும் தனக்கு நல்ல வசதியும், உபசாரமும் கிடைத்தனவென்றும் அவர் கூறினார்; அங்குள்ள வேறு நிலைகள் பற்றித் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார்.

4000 தொழிலாளருக்கு மீண்டும் வேலை?

புதவை, செப். 13—

நெடுநாட்களாக இங்கு மூடிக்கிடந்த இரு துணி ஆலைகள் செப். 20-ந் தேதிக்குள் மீண்டும் வேலை செய்ய ஆரம்பிக்கும்.

இதன் பலனாக, ஏறக்குறைய 4,000 தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்கும்.

தொழிலாளர்களுக்கு ஐந்து இலட்சம் வீடுகள் கட்டப்படுமாம்!

ரூ. 150 கோடி செலவிடத் திட்டம்?

ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் இந்திய சர்க்கார் உத்தேசம்

புதுடில்லி, செப் 13—

தொழிற்சாலைகள், நிலக்கரிச் சுரங்கங்கள், தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக இந்திய சர்க்காரின் தொழிலாளர் இலாகா தயாரித்துள்ள ஒரு பெரிய திட்டம் சமீபத்தில் திட்டக் குழுவினரால் பரிசிலனை செய்யப்படவிருக்கிறதாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு மட்டும் ஐந்து இலட்சம் வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது; இதற்கு மத்திய சர்க்காருக்கு ரூ. 150 கோடி செலவாகும்.

கடனாகவும், மானியமாகவும் உதவி செய்து, இந்திய சர்க்கார், தொழிலாளர் வீடுகள் திட்டத்தை நிறைவேற்றுவார்கள்; இதற்கு இந்திய சர்க்கார் ரூ 80 கோடி கடனாகவும், ரூ. 72 கோடி மானியமாகவும் கொடுக்க உத்தேசித்திருக்கிறார்கள்.

இரண்டரை இலட்சம் வீடுகள் மாநில சர்க்கார்களால் கட்டப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது; இதற்காக செலவில் பாதி கடனாகவும், பாதி மானியமாகவும் மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும்.

தனிப்பட்ட தொழிலதிபர்களும், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும், மீதமுள்ள இரண்டரை இலட்சம் வீடுகளைக் கட்டுவார்கள்; இதற்காக அவர்களுக்கு ரூ. 32 கோடி மானியமாகவும், ரூ 40 கோடி கடனாகவும் கொடுக்கப்படும்.

ஆண்டிற்கு 10,000 வீடுகள் வீதம் அடுத்த பத்து ஆண்டுகளில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களுக்காக இரண்டு அறைகள் கொண்ட ஒரு இலட்சம் வீடுகள் கட்டவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

சுரங்கத் தொழிலாளர்களுக்குக் கட்டாயம் வீடுகட்டித் தரவேண்டுமென சுரங்கங்கள் சட்டத்தைத் திருத்தவும் சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்கள். இதற்காக நிலக்கரிக்கு டன் ஒன்றுக்கு நாலணா 'செஸ்' விதிக்கப்படும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக சிறு தோட்டங்களின் சொந்தக்காரர்களுக்கு வீடுகளின் மொத்த விலையில் 80 சதவிகிதம் வரையில் குறைந்த வட்டியில் கடன் கொடுக்கப்படும். இந்தத் திட்டத்தில் சேரும் தோட்ட சொந்தக்காரர்களிடையே வினியோகிப்பதற்காக மாநில சர்க்கார்களுக்கு ரூ. 2·76 கோடி கடன் கொடுக்கப்படும்.

ஆயிரக்கணக்கான ஊழியர் தேவையாம்!

மக்கள் சபையில் அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, செப். 12—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அமைக்கப் படவிருக்கும் இரும்பு ஆலைகளுக்கு அனுபவம் வாய்ந்த 120 எஞ்சினியர்கள் தேவைப் படுவார்கள்; உயர்தர தொழில் நுட்பப் பொறுப்புகள் இவர்களிடம் ஒப்படைக்கப்படும்," என்று அமைச்சர் கிருஷ்ணமாச்சாரி மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

"மற்றும் தகுதி பெற்ற 1,200 எஞ்சினியர்களும், தேர்ச்சி பெற்ற 10,000 தொழிலாளர்களும், ஓரளவு பயிற்சி பெற்ற 7,000 தொழிலாளர்களும் தேவைப்படுவார்கள்; தேவையான ஊழியர்களைப் பொறுக்கி எடுத்து, அவர்களுக்கு மேலும் பயிற்சி அளிக்க இரும்பு, உருக்கு இலாகாவின் ஆதரவில் மத்திய நிறுவனம் ஒன்று அமைக்கப்படும்; இந்த நிறுவனம், உத்தேசிக்கப்பட்டுள்ள 3 ஆலைகளின் தேவைகளையும் கணக்கிட்டு தற்சமயம் உள்ள பயிற்சி வசதிகளையும் பயன்படுத்திக் கொள்ளும்; இதே போல் புதிய வசதிகளையும் கூட்டாக ஏற்படுத்தும்," என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 'இந்தியா'!

கொல்லம், செப். 14—

திரு-கொச்சி மாநிலத்தை 'இந்தியாவின் இந்தியா' என்று முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன் வர்ணித்திருக்கிறார்.

"மக்கட் பெருக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற—இந்தியாவைச் சூழ்ந்துள்ள பல சிக்கல்களும், இந்தியாவின் வேறெந்தப் பகுதியையும்விட திரு-கொச்சியில்தான் அதிகமாகவிருக்கின்றன;

"ஒரு சதுர மைலுக்கு சராசரியாக இந்தியாவில் 300 பேர் வாழ்கின்றனர் என்றால், திரு-கொச்சியில் 1,000 பேர் வாழ்கின்றனர்; பொதுவாக, இந்தியாவெங்கணும் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது என்றால், திரு-கொச்சியில் அது கடுமையாக இருக்கிறது,"

என்று, கல்லூரி ஒன்றில் புதிய கட்டிடம் ஒன்றைத் திறந்துவைக்கையில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

11,621 இந்தியர் நிலை பற்றி நேரு

புதுடில்லி, செப். 13—

மடகாஸ்கரில் சென்ற ஆண்டு ஆரம்பத்தில் 11,621 இந்தியர் இருந்ததாக மக்கள் சபையில், பிரதமர் நேரு அறிவித்தார்.

"அங்கு உள்ள இந்தியரின் வாழ்க்கை, குறிப்பாக வர்த்தகம் இதுவரை திருப்திகரமாகவே நடந்து வந்திருக்கிறது. திரும்பிச் செல்வதற்கான அனுமதி, பணம் அனுப்புவதற்கான வசதி முதலியவற்றில் இப்போது கஷ்டம் ஏற்பட்டிருப்பதாகப் புகார்கள் வரத் தொடங்கியிருக்கின்றன," என்றும் அவர் அறிவித்தார்.

விற்கப்பட்டுவிட்டதாம்!

கல்கத்தாவுக்கு அருகிலுள்ள சோடேபூர் கண்ணாடித் தொழிற்சாலை ரூ 62 இலட்சத்திற்கு ஒரு ஜப்பானியக் கம்பெனிக்கு விற்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

இந்தத் தொழிற்சாலையின் நிர்வாகத்தை மேற்கொண்டு நடத்துவதற்காக தொழில் நிதி உதவி கார்ப்பரேஷன் அந்த ஜப்பானியக் கம்பெனிக்கு ரூ. 62 இலட்சம் கடன் கொடுத்திருக்கிறது.

இந்தியாவுக்கு 450 — அமெரிக்க 'வாகன்'கள்

அமெரிக்க உதவித் திட்டத்தின் கீழ் இந்திய இரயில்வேக்களில் உபயோகிப்பதற்காக சுமார் 450 - வாகன்கள் வந்துள்ளன.

செப்டம்பர் 17-23: நாட்டுப் பிரிவினை வாரம்

காங்கிரஸ் கட்சி படும்பாடு!

கோவை, செப். 12—

அக்டோபர் 27-ந் தேதியன்று நடைபெறவிருக்கும் முனிசிபல் தேர்தலில், கோவை நகரில் காங்கிரஸ் கட்சி போட்டியிடத் தீர்மானித்திருப்பதால், கட்சி அபேட்சகர்களாக நிறுத்தப்படுவதற்கு 36 இடங்களுக்கு சுமார் 110 பேர்களிடையே தீவிரமான போட்டி ஏற்பட்டுள்ளது.

இரண்டு நாட்களாக செப்டம்பர் 8, 9-ந் தேதிகளில் கோவையிலுள்ள தியேட்டர் ஒன்றில், காங்கிரஸ் 'அட்ஹாக்' குழுவினர், விண்ணப்பதாரர்களுக்கும், அவர்களது ஆதரவாளர்களுக்கும் பேட்டியளித்தனர். இந்த விண்ணப்பப் பரிசீலனை, நகரிலும், குறிப்பாக காங்கிரஸ் வட்டாரங்களிலும் பெரும் பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது. அந்த இரண்டு தினங்களிலும், தியேட்டரில் முதல்தரமான படம் ஓடும்போது கூட இல்லாத அளவு கார்களும், மக்களும் வெளியில் கூடியிருந்தனர் எனக்கூறினால் மிகையாகாது.

இதுவரை, சர்வசாதாரணமாக 'கபர்டின்' 'ஷார்க் ஸ்கின்' சூட்டுகளில் காணப்படும் சில விண்ணப்பதாரர்கள், முதன்முதலாகக் கதராடைகளில் காட்சியளித்து, கூட்டத்தினரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியதாகக் கூறப்படுகிறது. மற்றும் ஒருசிலர், கதர் ஆடை இல்லாமலே குழுவின் முன் தோன்றினதாகவும் கூறப்படுகிறது.

பேட்டியில் குழுவினர் பல ரசமான கேள்விகளைக் கேட்டதாகவும் பேசிக்கொள்ளப்படுகிறது.

கீழ்க்கண்டவைகள் சில உதாரணங்களாகும்.

"காங்கிரஸ் அபேட்சகர்களாகத் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் காங்கிரசிற்கெதிராகப் போட்டியிடுவீரா?"

"கதர் ஆடை ஏன் உடுத்தவில்லை?"

"தேர்தலுக்கு எவ்வளவு செலவு செய்ய முடியும்?"

"ஆதரவாளர்கள் எத்தனைபேர்? யார், யார்?"

பல்வேறு அபேட்சகர்களும் பல ஆதரவாளர்களை அழைத்து வந்ததாகக் கூறப்படுகிறது.

ஒரு ரசமான சம்பவம் குறித்து செய்தி கிடைத்திருக்கிறது.

மனுச் செய்திருந்த அபேட்சகர்களில் ஒருவர், தம்முடன் வந்திருந்த 'கோஷ்டி'யினருக்கு, அருகிலுள்ள 'டீ' கடைக்காரரை, அவர்களுக்கு 'சப்ளை' செய்யுமாறு கூறிவிட்டு, தியேட்டருக்குள்ளே சென்றிருந்ததாகவும், திரும்பி வருவதற்குள் தம்முடைய 'பர்சி'லிருந்த பணத்திற்கு அதிகமாக ஆதரவாளர்கள் சிற்றுண்டி அருந்திவிட்டதால் அவருக்குச் சங்கடமான நிலைமை ஏற்பட்டுவிட்டதாகவும் கூறப்படுகிறது. —ந. இ.

ஊராண்மைக் கழக அதிகாரங்கள்

சென்னை சர்க்கார் முடிவு?

திருச்சி, செப். 17—

"மாவட்டக் கழகங்களை நீக்கும் பிரச்சினை சென்னை சர்க்காரின் தீவிர ஆலோசனையில் இருந்துவருகிறது; ஊராண்மைக் கழகங்களின் பொறுப்புகள் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது; மாவட்டக் கழகங்கள் நீக்கப்பட்டுவிட்டால், ஊராண்மைக் கழகங்களுக்கு இப்பொறுப்புக்கள் மேலும் அதிகரிக்கும்; இந்நிலைமையை ஒட்டி, ஊராண்மைக் கழகங்கள் நல்ல முறையில் பணியாற்ற முயல வேண்டும்," என்று அமைச்சர் எஸ். எஸ். இராமசாமி அவர்கள், அரியலூர் வரவேற்பில் குறிப்பிட்டுள்ளார்.

செய்த வேலைக்கே ஊதியமாம்!

துறைமுகத் தொழிலாளர் விசாரணைக் குழு சிபாரிசு

புதுடில்லி, செப். 12—

வேலை செய்த நேரத்துக்கு (மணிக் கணக்கில்) ஊதியங்கள் கொடுப்பதற்குப் பதிலாக, செய்த வேலைக்கு ஏற்ற ஊதியம் கொடுக்குமாறு துறைமுகத் தொழிலாளர் விசாரணைக் குழு தனது அறிக்கையில் சிபாரிசு செய்துள்ளது; அறிக்கை சர்க்காரிடம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது.

பம்பாய், சென்னை, கல்கத்தா துறைமுகங்களில், வேலை செய்த நேர அடிப்படையில் கூலி கொடுக்கப்படுகிறது.

இந்தியப் பஞ்சு ஏற்றுமதியாகிறது

இரண்டரை இலட்சம் பேல்கள் இந்தியப் பஞ்சு ஏற்றுமதியை உடனடியாக அனுமதிப்பதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாம். இப்போது அனுமதிக்கப்பட்டுள்ளதையும் சேர்த்து, இதுவரை 7 இலட்சம் பேல்கள் இந்தியப் பஞ்சு ஏற்றுமதிக்கு அனுமதி தரப்பட்டுள்ளது.

சிப்பந்திகளுக்குக் குடியிருப்பு

திட்டக் குழு ஒப்புதல்

கர்னூலில் ஆந்திர சர்க்காருக்குக் காரியாலயங்கள் கட்டவும், சிப்பந்திகள் வீடுகள் கட்டவும், ரூ. 2 கோடி அல்லது 3 கோடி வழங்குவதற்கு திட்டக் குழு ஒப்புக்கொண்டிருக்கிறதாம்.

ஜப்பானிய நெல் சாகுபடி முறை மிகப் பெரிய அளவில் கையாளப்பட்டு வருவது சென்னை மாநிலத்தில்தான்; இந்த மாநிலத்தில் சுமார் 5 இலட்சம் ஏகராவில் இம்முறை கையாளப்பட்டுவருகிறது; மகசூல் மிக அதிகமாக இருப்பது அசாமில்; அந்த மாநிலத்தில் ஏகருக்கு சராசரி 70 மணங்கு வீதம் மகசூல் கிடைக்கிறது.

நீதிக்கு விசித்திர விலை கோரிய நீதிபதிகள்!

அலெக்சாண்டிரியா, செப் 13—

முஸ்லிம் மத சம்பிரதாய சம்பந்தமான கோர்ட்டின் இரு உயர்தர மாஜிஸ்திரேட்டுகள் ஒழுக்கம் தவறி நடந்ததாக அலெக்சாண்டிரியாவில் உள்ள உயர்தர இராணுவ கோர்ட்டில் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றனர்.

அந்த மாஜிஸ்திரேட்டுகள் முஸ்லிம் விவாகரத்து கோர்ட்டில் நீதிபதிகளாக இருந்தனர்.

விவாகரத்து கோரியும், ஜீவனும்சம் கோரியும் அந்தக் கோர்ட்டுக்கு வரும் பெண்கள், மேற்கூறிய நீதிபதிகளுக்குச் 'சுகம்' கொடுத்துத் திருப்தி செய்த பிறகுதான் தமக்கு அனுகூலமான தீர்ப்பைப் பெற முடிந்ததாம்!

இறுதியில், ஒரு உயர்தர அதிகாரியின் இளம் மனைவி, அந்த இரு நீதிபதிகளின் நடத்தையைப் பற்றி அதிகாரிகளிடம் புகார் செய்தாராம்;

சுகத்திற்காக நியாயத்தை 'சீர்குலைவு' செய்த இரு நீதிபதிகளையும் கையும்களவுமாக அதிகாரிகள் கைது செய்தனராம்!

அவ்விருவரும் இராணுவ கோர்ட்டில் விசாரணை செய்யப்படுவர்; அவர்களுக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்படக்கூடும்

தி. மு. க. பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன்

காட்டுப்பாடி (வ. ஆ.) வருகை

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, காட்டுப்பாடி (வ. ஆ. மாவட்டம்) பஞ்சாயத்து போர்டு சார்பில், 17—9—55 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வரவேற்பளிக்கப்படும்.

மாலை 6 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், தோழர் கிருட்டினராஜ் தலைமையில், நாட்டுப் பிரிவினை நாளும், தி. மு. கழக 7-ம் ஆண்டு விழாவும், காட்டுப்பாடி வ. உ. சி. பூங்கா வெளியில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் பேசுவார்.

* * *

காங்கயம் வருகை

19—9—55 அன்று காங்கயம் தி. மு. கழக 7-வது ஆண்டு விழா, திராவிட நாடு பிரிவினை வார விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

அன்று மாலை 6 மணிக்கு காங்கயத்திற்கு வருகை தருகிற தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு ஊர்வலமும், மாலை 7 மணிக்குப் பொதுக் கூட்டமும் நடைபெறும் பொதுச்செயலாளர் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

தி. மு. கழக மாநில மாநாட்டு நிதி, பொதுச்செயலாளர் அவர்களிடம் தரப்படும்.

வளரும் விஞ்ஞானம்!

கால் நடை அபிவிருத்திக்கு அரும்பணி ஆற்றுகிறது

செயற்கை முறையில் கால்நடைகளைக் கர்ப்பம் தரிக்கச் செய்வதால் நல்ல முன்னேற்றமேற்பட்டிருக்கிறதாம்!

ஒருவித புது ஊசி மருந்தின் மூலம் மிருகங்களின் உடலில் பூரிப்புண்டாக்கி, வசந்தத்திலும், இலையுதிர்காலத்திலும் கன்றுகளை ஈனச் செய்வது சாத்தியமாம் இதே மருந்தின் மூலம் இரண்டு அல்லது மூன்று கன்றுகளை ஒரே சமயத்தில் ஈனும்படிச் செய்யலாமாம்!

அனுமதி தந்தனர்

சென்னை, செப். 13—

இந்திய வைத்தியக் கல்லூரியில் எல். ஐ. எம். அல்லது ஜி. சி. இ பட்டம் பெற்றவர்கள், இடைநிலைப் பள்ளிகளில் வாசிக்கும் மாணவர்களுக்கு வைத்தியப் பரிசோதனை நடத்தலாமென்று சர்க்கார் அனுமதித்துள்ளனர்.

இடம் பெயர்ந்தவர்களுக்கு, 1955-ம் ஆண்டில் ஜூன் 30-ந் தேதி வரை மொத்தம் ரூ. 9,05,81,093 பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது.

'மதுவிலக்கை அமுல் செய்க!'

'சூதாட்டத்தைத் தடை செய்க'

'இன்றேல் கட்சியிலிருந்து விலகுவேன்'

டட்லி சேனநாயகா கோரிக்கை

மதுவிலக்கை அமுல் செய்து, சூதாட்டத்தைத் தடை செய்யாவிட்டால், தான் ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிவிடப் போவதாக இலங்கை முன்னாள் பிரதம மந்திரியான டட்லி சேனநாயகா தெரிவித்திருக்கிறார்.

"எவரேனும் என்னை எதிர்த்த போதிலும், இந்த இரண்டு கொடுமைகளையும் ஒழிக்க சட்டம் கொண்டு வருமாறு சர்க்காரை வற்புறுத்துவதற்காக நான் துவக்கியுள்ள இயக்கத்தை வெற்றி பெறும் வரை நடத்தியே தீருவேன்,"

என்று, அவர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த மாநாட்டின்போது சேனநாயகாவால் கொண்டு வரப்பட்ட மதுவிலக்கு பற்றிய தீர்மானம் நிறைவேறியிருக்கிறது; சர்க்கார் அதை ஒட்டி, மதுவிலக்கு அமுல் செய்வதுபற்றி விசாரணை செய்யுமாறு ஒரு குழு நியமித்திருக்கின்றனர்.

திருநெல்வேலி-குமரிமுனை இரயில்வே இணைப்பு

150 மைல் நீளமிருக்கும்

புதுடில்லி, செப். 13—

திருநெல்வேலியுடனும், திருவனந்தபுரத்துடனும் குமரிமுனையை இணைப்பதற்கு 'மீட்டர்கேஜ்' இரயில்வே பாதை ஒன்று அமைப்பது பற்றி தென் பிராந்திய இரயில்வேயால் 'சர்வே' நடத்தப்படுமாம்.

150 மைல் நீளமுள்ளதாக இந்த பாதை இருக்குமென்றும், இதற்காக ரூ 54,000 அனுமதிக்கப்பட்டுள்ளதென்றும் தெரிகிறது.

பெங்களூர்—மைசூர் பஸ் போக்குவரத்து

சர்க்காரே ஏற்று நடத்தும்

மைசூர் நகரத்தில், அக். 1-ந் தேதி முதல், பஸ் போக்குவரத்தை சர்க்காரே ஏற்று நடத்தும்.

1956 ஜனவரி 1-ந் தேதி முதல் பெங்களூர் போக்குவரத்துக் கம்பெனியையும் சர்க்கார் எடுத்துக் கொள்வார்களாம்.

இந்திய மோட்டார் வண்டித் தொழிலில் மொத்தம் ரூ. 14 35 கோடி மூலதனம் போடப்பட்டிருக்கிறது; இந்தத் தொகை அனேகமாக முற்றிலுமே இந்தியாவினுடையதாகும்; இந்தத் தொழில் தற்போது சுமார் 7,000 பேருக்கு வேலையளித்து வருகிறது.

தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டம்

சென்னையில் அமுலாகும்

சென்னை, செப். 18—

தொழிலாளர் அரசாங்க இன்சூரன்ஸ் திட்டம், சென்னை நகரத்தில், வரும் நவம்பர் திங்களில் அமுலாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் 50,000 தொழிலாளர்கள் நன்மை பெறக்கூடும்.

இத்திட்டத்தின் கீழ், மாநில ஆட்சியினர், மருத்துவ வசதிகள் செய்து தருவர்; நகரிலும், சுற்றுப்புறங்களிலும் உள்ள தொழிலாளர்களுக்கென 15 மருத்துவ விடுதிகளை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக பூந்தமல்லி பெரிய சாலையில் பெரியதோர் மருத்துவ விடுதி ஆரம்பமாகும்; 100 பேர் தங்கி சிகிச்சை பெறுவதற்கு இதில் வசதியிருக்கும்; தனியாக 'ஆம்புலன்ஸ்' வண்டிகளும் இருக்கும்.

'நம் நாடு' இதழுக்கு நன்கொடை

10-9-55: மேலக்கற்கண்டார் கோட்டை குழந்தை புகழேந்தியின் பெயரிடு விழாவின் நினைவாக ரூ 2—0—0

10-9-55: பொன்மலைப் பட்டியில் பொதுச் செயலாளர் பொதுக் கூட்டத்தில் ரூ. 0—12—9

11-9-55: இராசிபுரத்தில் பொதுச் செயலாளர் பொதுக் கூட்டத்தில் ரூ 2—0—0

மேற்கண்ட தொகைகள் வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

1954—55-ம் ஆண்டில் மொத்தம் ரூ. 3,48,10,111 பெறுமான முன்ன 1,81,85,130 கெஜம் கதர் துணி இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டது; 1953—54-ம் ஆண்டிலோ உற்பத்தியானது 1,15,45,199 கெஜம்; அதன் மொத்தப் பெறுமானம் ரூ. 2,13,28,424.

செய்திச் சுருள்

★

புத்திரகவுண்டன்பாளையத்தில் கோவா கண்டன ஊர்வலம்

7—9—55 காலை 9 மணிக்கு, புத்திரகவுண்டன்பாளையம் பஸ் நிலையத்திலிருந்து திரு. என். சட்டையா தலைமையில் கோவா போராட்டத்தில் உயிர்நீத்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் சர்வ கட்சியினரும் அடங்கிய ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாகச் சென்று 11 மணியளவில் முடிவடைந்தது.

திருமணம்

11—9—55 காலை 9 மணிக்கு, சென்னை, நுங்கம்பாக்கத்தில், தோழர் புண்ணியநாதன்—தோழியர் புஷ்பராணி திருமணம், திரு. காரண துரைக்கண்ணன் தலைமையில் நடைபெற்றது. திரு. வ. சங்கரநாராயணன் திருமணத்தை நடத்திவைத்தார்.

பிறப்பு

மண்பறை தி. மு. கழகத் தோழர் செ. கணபதி அவர்கள் துணைவியார், ஆவணித் திங்கள் 3-ந் தேதியன்று பெண் மகவு ஒன்றுக்குத் தாயானார். தாயும் சேயும் நலம்.

க. திருமாறன்-பத்மா திருமணம்

12—9—55 காலை, சென்னை புரசைபாக்கம் பெரியசாலை எண். 65 இல்லத்தில், தோழர் க. அன்பழகன் அவர்களது தம்பியார் தோழர் க. திருமாறன்—தோழியர் பத்மா திருமணம், பேராசிரியர் திரு மு. வரதராசனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தமது முன்னுரையில், வள்ளுவர் நெறியினைக் கடைப்பிடித்து மணமக்கள் இல்லற இன்பம் பெற்று, நல்வாழ்வு நடத்தி, நீடூழி வாழ வாழ்த்தினார்.

பின்னர், தோழர்கள் அமிருதகணேசன், சி. சுப்பையா, அ. பொன்னம்பலனார், சென்னை தியாகராயர் கல்லூரி பிரின்சிபால் சண்முகம், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் மணமக்களைப் பாராட்டி உரை நிகழ்த்தியதும், அண்ணா அவர்கள் மணமக்களை வாழ்த்திச் சொற்பொழிவாற்றினார்.

பின்னர் மணமகன் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பேராசிரியர் க. அன்பழகன்—வெற்றிச்செல்வி தம்பதிகள், டாக்டர் திரு. கே. ஆர். சுந்தரம் ஆகியோர் அனைவரையும் வரவேற்று உபசரித்தனர்.

தி.மு.க. ஏழாவது ஆண்டுவிழா கொண்டாடுவீர்

கொள்கைக் குழப்பத்தில்.....

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

டும் என்பதற்காக வடவரின் ஏஜெண்டுகள் வந்து போய்க்கொண்டிருக்கின்றனர்;

"அவர்களிலே ஒருவராகத்தான் சர்தார் பணிக்கர், சில நாட்களுக்கு முன்னர் சென்னைக்கு வந்து, 'இந்தியைப் படியுங்கள்; இந்தியா முழுவதும் ஒரே நாடு'—என்று பேசிவிட்டுப் போயிருக்கிறார். அவர் தனக்குத் தரப்படும் கூலிக்குச் சரியான வேலையைச் செய்துவிட்டுப் போயிருக்கிறார் என்றே நாம் கொள்வோம்; அவர் சர்தாராயிருந்தாலும்—பெரும் அறிவாளி என்று கருதப்படுபவராயிருந்தாலும் நமக்குக் கவலை இல்லை; அவரைப் போன்ற பலவீனமான உள்ளம் படைத்தவர்கள், உளுத்துப்போன ஏகாதிபத்திய அமைப்பின் கம்புகளைப் பிடித்துக்கொண்டு தொங்குவதைப் பற்றி நாம் அக்கரை காட்டத் தேவை இல்லை;

"சென்னையைச் சேர்ந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரி, மத்திய சர்க்காரில் மந்திரி; அவர், 'சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைக்க வேண்டும்,' என்ற நமது கோரிக்கை பற்றி இழிவாகப் பேசினர்; அந்த மனிதர், 'நமக்கு இரும்புத் தொழிற்சாலை அவசியமல்ல' என்று செய்த உபதேசத்தை, ரூர்கேலாவில்—பிகாரில்—துர்க்காபூரில் பேசவில்லை; இங்கெல்லாம் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் செலவில் இரும்புத் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன; அங்கெல்லாம் செய்யாத உபதேசத்தை இங்கு மேற்கொள்ளுவதற்குக் காரணம், வடவரிடம் இவர் பெற்றுள்ள மந்திரி பதவி என்பதைத் தவிர வேறென்ன?

வட நாட்டவர், தென்னாட்டில் உள்ள சில அறிவாளிகளை விலைக்கு வாங்கிவிட்டதால், இங்குள்ள இதரர்களை எல்லாம் 'முட்டாள்கள்' என்று தப்புக் கணக்குப் போட்டிருக்கின்றனர் போலும்!

"தி. மு. கழகத்தின் கண்ணியம், இன்று நாட்டில் நிலை பெற்றிருக்கிறது; தி. மு. கழகம் ஒன்றுதான் இந்த நாட்டில் முன்னுக்குப் பின் முரண்படாது, கொள்கைக் குழப்பத்தில் சிக்காது விளங்கும் ஒரே கட்சியாக இந்த நாட்டில் விளங்குகிறது; தென்னாட்டில் மட்டுமின்றி, அகில இந்தியா பூராவிலுமே 'கொள்கை முரண்பாட்டிற்கு ஆளாகாத கட்சி' ஒன்று உண்டு என்றால், அது தி. மு. கழகமாகத்தான் இருக்க முடியும்;

"பண்டித நேரு அண்மையில் ரஷ்யா சென்று திரும்பினார்; உடனே கம்யூனிஸ்டு நண்பர்கள் அவரைப் பாராட்ட முற்பட்டனர்;

"உள் நாட்டில், பண்டித நேருவும், அவரது சர்க்காரும், ஜன விரோதமான நடவடிக்கைகளில் — பிற்போக்கான கொள்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்—ஊறிப் போயிருக்கின்றனர் என்று கம்யூனிஸ்டுகள் கூறுகின்றனர்; அதே நேரத்தில், 'பண்டித நேரு, உலக சமாதானத்திற்காகப் பாடுபடுகிறார் என்பதால் அவரை ஆதரிக்கிறோம்,' என்கின்றனர்;

"உள் நாட்டில், ஜன விரோதியாக இருக்கும் ஒரு மனிதர், உலகெங்கணுமுள்ள மக்களின் அமைதியான வாழ்க்கைக்காக எப்படிப் பாடுபடமுடியும்? இத்தனை பெரிய முரண்பாட்டினை எப்படி நாட்டவர் ஜீரணித்துக்கொள்ள முடியும்?

"தி. மு. கழகத்தினர், இந்தியப் பேரரசிடம் உள்ள வேறு பல படைகளுக்கு மட்டுமின்றி, பண்டிதரின் அகில உலக விளம்பரப் படையையும் கண்டு அஞ்சாதவர்களாக—கலங்காதவர்களாக இருக்கின்றவர்கள்;

"காங்கிரஸ்காரர்கள், இன்று நம்மை—நமது முழக்கத்தை எதிர்ப்பதற்குக் கண்டுபிடிக்கிற புதிய—நவீன ஆயுதங்களுள் பண்டிதருக்குத் தரப்படும் அகில உலக விளம்பரத்தையும் கண்டுபிடித்திருக்கின்றனர்;

"நேருவின் ரஷ்ய விஜயத்தை அவர்கள், இந்த நாட்டில் தங்களது அரசியல் கைமுதலாகக் கொண்டு, நமது கோரிக்கையை—விடுதலைத் தாகத்தை ஒழித்துவிட முயற்சிக்கின்றனர்;

"அவர்களுக்குத் தெரிய வேண்டும்—நாம்—தி. மு. கழகத்தவர், பண்டிதருக்குத் தரப்படும் விளம்பரத்தைக் கண்டு மன மயக்கம் பெற்றுவிடவில்லை—என்பது!

"பண்டிதர் ரஷ்யா சென்று பெற்ற வரவேற்புகள் நம்மை நிச்சயமாகக் கொள்கைக் குழப்பத்தில் கொண்டுபோய் விட முடியாது—கம்யூனிஸ்டுகளுக்கு ஏற்பட்ட கதியைப்போல!

"நமது விடுதலைக் கோரிக்கை, நியாயங்களின் அடிப்படையில் எழுந்திருக்கிறது—என்பதை, விரைவில் உலகத்திற்கு நாம் உணர்த்துவோம்."

—இவ்வாறு, தோழர் ஈ. வெ கி. சம்பத் அவர்கள், 11—9—55-ல் நடைபெற்ற சென்னை 31-வது வட்ட தி மு கழக ஏழாவது ஆண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார் அவரது சொற்பொழிவின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது. பிற்பகுதி இங்கு தரப்படுகிறது:—

தோழர் சம்பத் அவர்கள், தனது உரையின் பிற்பகுதியில், வடநாடு தென்னாட்டை ஆதிக்கம் செலுத்துகிறது என்பதற்குப் பற்பல ஆதாரங்களைக் காட்டியதுடன், இந்த நாட்டு மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் சூத்திரதாரிகள் வடநாட்டவர்தான் என்பதை நிரூபிக்க சான்றுகளையும் காட்டினார்.

மேலும், இந்திய சர்க்காருக்கு கோவா விடுதலைப் பிரச்சினையில் ஏற்பட்ட கொள்கைக் குழப்பத்தினால், பெரியதொரு துரோகச் செயலில் ஈடுபட்டிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

மேலும், ஐந்தாண்டுத் திட்டங்களின் பொருளாதார அபிவிருத்தித் தன்மை குறித்தும், அவற்றில் தென்னாட்டிற்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்தும், விளக்கம் தந்தார்.

அணுசக்தியின் ஆக்க வேலைகளை எடுத்துக் காட்டும் திரைப்படம் ஒன்று 'சினிராமா' எனப்படும் அகன்ற திரையில் காட்டக்கூடிய வாறு இன்னும் ஓராண்டுக்குள் எடுத்து முடிக்கப்படும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

16—9—55 மாலை 6 மணிக்கு, சென்னை—முத்தியாலுப்பேட்டை சாலைவிநாயகர் கோயில் தெரு முத்தமிழ் மன்றத்தில், தோழர் டி. கோவிந்தன் தலைமையில், 'பண்டிகைகள் தேவையா?' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

பெரம்பூரில் அண்ணாதுரை

நாட்டுப் பிரிவினை வார விழாவும், தி. மு. க. 7-வது ஆண்டு விழாவும்

18—9—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு, சென்னை-பெரம்பூர் ஏரி மைதானத்தில், தோழர் டி. சண்முகம் எம். எல். ஏ., தலைமையில் நடைபெறும்; அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

கூட்டத்தில், பெரம்பூர் இரயில்வே தொழிலாளர்கள் சார்பில் மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

* * *

சென்னை மாவட்டக் கிளைக் கழகத் தோழர்கட்கு

திராவிட நாடு பிரிவினை வார ஊர்வலம்

"18-9-55 ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு, சென்னை நேப்பியர் பார்க்கிலிருந்து, மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, முக்கிய தெருக்கள் வழியாகச் சென்று, அன்று மாலை பெரம்பூரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தை அடையும். எல்லாக் கிளைக் கழகங்களும் கழகக் கொடிகளேந்தி ஊர்வலத்தில் திரண்டு வர வேண்டுகிறேன்,"

என்று, சென்னை மாவட்ட தி மு கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் திருப்பூர் வருகை

18—9—55 அன்று, தி. மு. கழக 7-வது ஆண்டு விழாவும், மாநில மாநாட்டு நிதியளிப்பு விழாவும், பொதுச்செயலாளர் வரவேற்பும் நடைபெறும்.

காலை 10 மணிக்கு, திருப்பூர் புஷ்பா தியேட்டரில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் கி. மனோகரன் ஆகியோர் பேசுவர்.

அன்று மாலை, நொய்யல்நதியில் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் பேசுவார்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை (வண்ணை)

தி மு.கழக 7-வது ஆண்டு விழா

கே. எஸ். பாண்டியன் திடலில்

16—9—55 *மாலை* 6 *மணிக்கு*

தலைவர்: டி. எஸ். வேலன்

பேசுவோர்:

கி. மனோகரன்
இளம்பரிதி
மதிவாணன்

★

பம்பாய் (தாராவி)

திராவிட நாடு பிரிவினை நாள்

குடியரசு நிலையத்தில்

18—9—55 *மாலை* 6 *மணிக்கு*

தலைவர்: ஆரியசங்காரன்

பேசுவோர்:

ந. ந. பாலையா
எஸ். தங்கையா
என். எஸ். மாடசாமி
சு. தே. இராசையா
மா. அண்ணாமலை
ரேத்தினசாமி
எஸ். தியாகராசன்

★

நத்தம்

17—9—55 *மாலை 6 மணிக்கு, தோழர் மணி தலைமையில் நடைபெறும். தோழர் அறிவுடைநம்பி பேசுவார்.*

விற்பனையாகிறது!

'அத்தான்'

[புதுமை நாடகம்]

★

'தென்றல்' துணை ஆசிரியர்

எஸ். எஸ். தென்னரசு

எழுதியது

★

விலை ரூ. 1-0-0

★

நீலா நிலையம்,

2/127, மவுண்ட் ரோடு, சென்னை—6

பாரதி விழா

17—9—55 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு, சென்னை, திருவல்லிக்கேணி நடராஜா கல்விக் கழகத்தில், திரு. வி சக்கரை அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது, பாரதியின் சீடர் புதுவை ரா. கனகலிங்கம் அவர்களுக்கு, திரு. பரலி சு நெல்லையப்பர் பண முடிப்பு அளிப்பார். திரு. டி. திருநாவுக்கரசு கதராடை போர்த்துவார். திரு. வ. உ. சி. சுப்பிரமணியம், குமாரி அ. து. அகிலாண்டம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அறிவிப்பு

"'44-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள்' என்ற தலைப்புடன், 26—8—55 தேதியிட்டு, நகர சபைத் தேர்தல் பற்றி என் பெயரில் வெளியிடப்பட்டுள்ள துண்டு அறிக்கைக்கும், எங்கள் கழகத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை,"

என்று, சென்னை 44-வது வட்ட தி. மு. கழகச் செயலாளர் ஏ. இராதாகிருஷ்ணன் அறிவிக்கிறார்.

ஏஜெண்டுதோழர்கட்கு முக்கிய அறிவிப்பு

'நம் நாடு' இதழ்களை இதுகாறும் தங்கள் தங்கள் முகவரியிலேயே தபால்காரர் மூலம் பெற்றுவந்த ஏஜெண்டுத் தோழர்கள், இனி, தங்கள் தங்கள் ஊர் தபால் நிலையத்திலேயே பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தபால் அதிகாரிகள் அறிவித்திருப்பதையொட்டி, ஒவ்வொரு பார்சலின்மேலும், 'To be Delivered at Window' என்று எழுதி அனுப்பப்படுகிறது.

எனவே, தபால்மூலம் இதழ்களைப் பெறும் ஏஜெண்டுத் தோழர்கள் அனைவரும், இனி தங்கள் தங்கள் ஊர் தபால் நிலையத்திற்கே நேரில் சென்று, 'நம் நாடு' இதழ்க் கட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

சென்னை-13 } பொறுப்பாளர்
15—9—55 } 'நம் நாடு'.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.